மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்

முன்னிலை :-திரு. நா.சுரேஷ், எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்

2017-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் நாள் புதன்கிழமை
(2048- திருவள்ளுவராண்டு -ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம்,13-ம் நாள்)

அ.வ.எண்.203/2012

1. N.துரைசாமி
2. N.ரங்கசாமி
3. N.சின்னசாமி

2,3 லக்கமிட்டவர்களுக்கு பொது அதிகாரம் பெற்ற
N.துரைசாமி. ..வாதிகள்.

. /எதிராக/

பழனிச்சாமிக்கவுண்டர் ..பிரதிவாதி..

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 30.10.2017 ம் தேதியன்று என்முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பன்னீர்செல்வம், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.கருணாமூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், பின்னிட்டு பிரதிவாதி அழைக்கப்பட்டு வருகை தரவில்லை என்பதால் தோன்றா தரப்பினராக தீர்மாணிக்கப்பட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**"தீ ர் ப் பு ரை"**

பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் கோரி வாதிகளால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரைச் சுருக்கம்:-**

தாவாச் சொத்துக்கள் பிரதிவாதி பொதுக்குடும்ப தலைவராக இருந்து பொதுவில் அனுபவித்து வந்த பொதுக்குடும்ப சொத்தாகும். மேற்படி பொதுக்குடும்ப சொத்துக்களில் சரிபாதி பங்கு பாத்தியஸ்தரான பிரதிவாதியின் மகன் செல்லமுத்து என்பவர் இந்த வாதிகளின் தகப்பனாரான நல்லசாமிக்கவுண்டரிடம் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதில் மேற்படியார் கிரையம் செய்து கொடுக்க முன் வராத காரணத்தால் இந்த பிரதிவாதியின் மகனான பி.செல்லமுத்து மற்றும் மேற்படியாரின் மக்களான சரவணன், கலையரசன் ஆகியோர் பேரில் தாவா சொத்துக்களை பொறுத்து கிரையம் செய்து

கொடுக்கும்படி தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.270/2004 ம் நம்பரில் தாவா தாக்கல் செய்து மேற்படி தாவா 27.02.2007 தீர்ப்பாணை செய்யப்பட்டது. தீர்ப்புக்கு பின்னிட்டு வாதிகளின் தகப்பனாரான நல்லசாமிக்கவுண்டர் கடந்த 18.10.2008 ல் இறந்துவிட்டார். மேற்படியார்களின் வாரிசுதாரர்கள் இந்த வாதிகள் மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற தங்களின் மூத்த சகோதரர் ஆன 1 ம் வாதியான N.துரைசாமி, அவர் கடந்த 11.06.2009 ல் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனர். மேற்படி பொது அதிகாரப் பத்திரப்படி இந்த வாதி தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் E.P.No.46/2009,ல் தீர்ப்பாணைப்படி கிரையம் செய்து கொடுக்க கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் ஏற்பட்ட உத்தரவு பரிகாரம் மேற்படி செல்லமுத்து-1, செல்லமுத்து குமாரர்கள் ஆன கலையரசன் 2, சரவணன்3, ஆகியோர்களுக்காக தாவாச் சொத்துக்களில் சரிபாதி சொத்துக்களை அதாவது கிரைய உடன்படிக்கையில் குறிப்பிட்ட சொத்துக்களை தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 12.04.2011 ல் கிரையம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளனர். மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு கிரையச் சொத்துக்களை சுவாதீனம் கோரி மேற்படி குறிப்பிட்ட செல்லமுத்து வகையரா பேரில் E.P.No.41/11 தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் நீதிமன்ற உத்தரவுப்படி இந்த வாதி நீதிமன்ற அமீனா மூலம் 19.03.2012 ல் சுவாதீனம் பெற்றுள்ளார். மேற்படி சொத்துக்களை பொது பாதி இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு பொது சுவாதீனத்தில் இருந்து வருகிறார். வருவாய்துறை ஆவணங்களிலும் உரிய நடவடிக்கை எடுத்து இந்த வாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களில் சரிபாதி பாத்தியஸ்தரான இந்த பிரதிவாதியை வாதி கோர்ட் மூலம் பொது அதிகாரம் பெற்ற சரிபாதி பங்கினை பிரித்து கொடுக்கும்படி பாகப்பிரிவினை செய்து தனி சுவாதீனம் கொடுக்க வேண்டி பலமுறை நேரில் கேட்டும் பிரதிவாதி ஒத்துக்கொள்ளவில்லை. இறுதியாக கடந்த 27.05.2012 ம் தேதி பிரதிவாதியை தாவா சொத்துக்களை சரிபாதி பங்கினை பாகப்பிரிவினை செய்து கொடுக்கும்படி கேட்க பிரதிவாதி ஒத்துக்கொள்ளவில்லை. எனவே தாவா சொத்துக்களை இரண்டு சமபாகங்களாக பிரித்து அதில் வாதிகளுக்கு ஒரு பாகத்தை ஒதுக்கி தனிச்சுவாதீனம் செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>

வாதியின் தாவா சுத்த பொய்யும் பிரட்டும் மோசடியானது ஆகும். வாதிகள் இந்த பிரதிவாதியின் மகன் மற்றும் பேரன்களிடம் கிரையம் பெற்ற விபரம் இந்த பிரதிவாதி தெரியாது. மேலும் அவர்கள் நி.ம.41/2011 ன் மூலம் ஒப்படைப்பு பெற்றதாக கூறுவது

பொய் ஆகும். வாதிகள் எப்பவும் சுவாதீனம் எடுக்கவில்லை. அவர்கள் கூட்டுச்சுவாதீனத்தில் இருப்பதாக கூறுவது பொய் ஆகும். மேலும் பிராதில் 27.05.2012 ல் பொதுபாதி சொத்தை பங்கிக்கொள்ள கேட்டதாக கூறுவது பொய். இந்தப் பிரதிவாதி அவரின் மகன் பெயரில் 29.01.2002 ம் ஆண்டு கொமாராபாளையம் கிராமம் சர்வே எண்.785/3, சர்வே எண்.788/1, சர்வே எண்.796/A,மற்றும் சின்னமருதூர் கிராமம் சர்வே எண்.1137/1,1137/2,1137/3,1136/4,1136/5,ஆகியவைகளில் உள்ள நிலங்களை சேர்க்காமல் வழக்கிட்டுள்ளார். மேற்படி சொத்து பொதுக்குடும்ப வருமானத்தில் இருந்து பெறப்பட்டது ஆகும். மற்றும் ஊர்க்கட்டில் உள்ள வீட்டை சேர்க்காமல் வழக்கிட்டுள்ளார். அதனால் இந்த வழக்கு சேர்க்கவேண்டிய சொத்தை சேர்க்காத தோசத்திற்கு உள்ளாகின்றது. மேற்படி சொத்துக்களில் இந்த பிரதிவாதியின் மகன், மற்றும் பேரன்களுக்கு பங்கு உள்ளதால் இந்த வழக்கு சேர்க்கவேண்டிய கட்சிக்காரரை சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகின்றது. பிரதிவாதி மேற்படி மகன் செல்லமுத்து மற்றும் செல்லமுத்துவின் மக்கள் ஆகியோர் ஒரே இந்து பொதுக்குடும்பமாக உள்ளனர். இதில் இந்த பிரதிவாதி தான் இந்து பொதுக்குடும்பத்தின் கர்த்தாவாக இருந்து பராமரித்து வருகின்றார். முன்வழக்கில் சம்மந்தப்பட்ட செல்லமுத்து எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் 18.09.2002 ம் தேதிய ஒப்பந்த ஆவணம் செல்லத்தக்கது அல்ல. மேற்படி செல்லமுத்து பொதுக்குடும்ப சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் எழுத வேண்டிய அவசியமோ, கடன்பெற வேண்டிய அவசியமோ இல்லை. தாவாவில் சம்மந்தப்பட்ட சொத்து அப்போதே ரூ.5,00,000/-மேல் மதிப்பு பெரும். சர்வே எண்.787/2 ஏக்கர் 2.18 ½ என்பது இந்த பிரதிவாதியின் தனிப்பட்ட கிரைய சொத்து அதில் இந்த பிரதிவாதி மகன் கிரைய ஒப்பந்தம் செய்ய உரிமை இல்லை. அந்த ஒப்பந்தம் மூலம் டிக்கிரி பெற்றிருந்தாலும் செல்லாது. நாளது தேதிவரை மேற்படி சொத்து பாத்தியமும் அனுபவமும் என்னிடம் தான் உள்ளது. எனவே வாதிகளின் தாவாவை பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுவேண்டுமாய் பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

4. <u>வழக்குரை எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன:-</u>

*" 1. whether the Plaintiffs are entitled for a relief of partition of suit properties into 2 equal shares and for allotment of one separated share as prayed for in the plaint?*

*2. Whether the suit is liable to be dismissed on the ground of non - joinder of necessary parties and properties as claimed by the defendant?*

*3. To what other relief the plaintiffs are entitled to?"*

5. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு பிரதிவாதி

நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளபோதிலும் பின்னிட்டு பிரதிவாதி அழைக்கப்பட்டு வருகைதராததால் அவருக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்மாணிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் 1ம் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்துள்ளார்.

6. இந்த வழக்கில் தீர்மாணிக்க வேண்டிய பிரச்சினை யாதெனில், வாதிகளின் வழக்குரையில் கோரியுள்ள பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதா? என்பதேயாகும்.

__7. தீர்வுக்குரிய பிரச்சனை :-__

இவ்வழக்கில் 1ம் வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளையே சாட்சியமாக, அளித்து, பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், பிரதிவாதி பொதுக்குடும்ப தலைவராக இருந்து பொதுவில் அனுபவித்து வந்த பொதுக்குடும்ப சொத்தாகும் என்றும் மேற்படி பொதுக்குடும்ப சொத்துக்களில் சரிபாதி பங்கு பாத்தியஸ்தரான செல்லமுத்து என்பவர் தங்களின் தகப்பனாரான நல்லசாமிக்கவுண்டர் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதில் மேற்படியார் கிரையம் செய்து கொடுக்க முன்வராத காரணத்தால் இந்த பிரதிவாதியின் மகனான பி.செல்லமுத்து மற்றும் மேற்படியாரின் மக்களான சரவணன், கலையரசன் ஆகியோர் பேரில் தாவா சொத்துக்களை பொறுத்து கிரையம் செய்து கொடுக்கும்படி தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.270/2004ம் நம்பரில் தாவா தாக்கல் செய்து மேற்படி தாவா 27.02.2007 தீர்ப்பாணை செய்யப்பட்டது என்றும் தீர்ப்புக்கு பின்னிட்டு தங்களின் தகப்பனாரான நல்லசாமிக்கவுண்டர் கடந்த 18.10.2008ல் இறந்துவிட்டார் என்றும் மேற்படியார்களின் வாரிசுதாரர்கள் இந்த வாதிகள் மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற தங்களின் மூத்த சகோதரர் ஆன தனக்கு கடந்த 11.06.2009ல் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றும் மேற்படி பொது அதிகாரப் பத்திரப்படி தான் தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் E.P.No.46/2009,ல் தீர்ப்பாணைப்படி கிரையம் செய்து கொடுக்க கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் ஏற்பட்ட உத்தரவு பரிகாரம் மேற்படி செல்லமுத்து-1, செல்லமுத்து குமாரர்கள் ஆன கரையரசன் 2, சரவணன்3, ஆகியோர்களுக்காக தாவாச் சொத்துக்களில் சரிபாதி சொத்துக்களை அதாவது கிரைய உடன்படிக்கையில் குறிப்பிட்ட சொத்துக்களை தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 12.04.2011ல் கிரையம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றும் மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு கிரையச் சொத்துக்களை சுவாதீனம் கோரி மேற்படி குறிப்பிட்ட செல்லமுத்து வகையரா பேரில் E.P.No.41/11 தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு

தாக்கல் செய்து மேற்படி மனுவில் நீதிமன்ற உத்தரவுப்படி தான் நீதிமன்ற அமீனா மூலம் 19.03.2012 ல் சுவாதீனம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி சொத்துக்களை பொது பாதி இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு பொது சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும் வருவாய்துறை ஆவணங்களிலும் உரிய நடவடிக்கை எடுத்து தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்துக்களில் சரிபாதி பாத்தியஸ்தரான இந்த பிரதிவாதியை தான் கோர்ட் மூலம் பொது அதிகாரம் பெற்ற சரிபாதி பங்கினை பிரித்து கொடுக்கும்படி பாகப்பிரிவினை செய்து தனி சுவாதீனம் கொடுக்க வேண்டி பலமுறை நேரில் கேட்டும் பிரதிவாதி ஒத்துக்கொள்ளவில்லை என்றும் இறுதியாக கடந்த 27.05.2012 ம் தேதி பிரதிவாதியை தாவா சொத்துக்களை சரிபாதி பங்கினை பாகப்பிரிவினை செய்து கொடுக்கும்படி கேட்க பிரதிவாதி ஒத்துக்கொள்ளவில்லை என்றும் எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வாறு வாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்து வாதிகள் தரப்பில் இவ்வாறு சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டிருந்து, பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளபோதிலும் பின்னிட்டு தனக்குள்ள ஆட்சேபனையைப் பொறுத்து, பிரதிவாதி நீதிமன்றத்தில் தோன்றி, சாட்சிய சான்றவாணங்கள் தாக்கல் செய்து ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 ஆன பொதுஅதிகார பத்திரத்தை பார்வையிடும்போது கடந்த 11.06.2009 ம் தேதியில் தாவாச் சொத்துக்களை பொறுத்து 2,3 வாதிகள் 1 ம் வாதிக்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிகொடுத்துள்ளனர் என தெரிகிறது. மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.2 ஆன கிரையபத்திரத்தை பார்வையிடும்போது கடந்த 12.04.2011 ம் தேதியில் வாதிகளுக்கு தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.270/2004 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தாவாச் சொத்தை பொறுத்து நீதிமன்றத்தால் கிரைய பத்திரம் எழுதிகொடுக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது. மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.3 ஆன நி.ம.எண்.41/2011 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை பார்வையிடும்போது தாவாச் சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்கு சுவாதீனம் பெற கடந்த 17.02.2012 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என தெரிகிறது. மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.4 ஐ பார்வையிடும்போது நி.ம.எண்.41/2011 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தாவாச் சொத்தானது கடந்த 19.03.2012 ம் தேதியில் வாதிகளுக்கு நீதிமன்ற அமீனா மூலம் பொது சுவாதீனம் வழங்கப்பட்டுள்ளது என தெரிகிறது. மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.5 மற்றும்

வா.சா.ஆ.6 ஆன தாவாச் சொத்திற்கான பட்டாவினை பார்வையிடும்போது அதில் பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிகிறது.

7. எனவே பிரதிவாதி தரப்பில், வாதிகளுக்கு தாவா சொத்தில் 1/2 பாகம் ஏதும் கிடைக்கதக்கதல்ல என்றும் வாதிகள் தாவாச் சொத்தின் பொது சுவாதீனத்தில் இல்லை என்றும் தாவாச் சொத்துக்களில் பிரதிவாதியின் மற்ற சொத்துக்களை சேர்க்கவில்லை என்றும் மேற்படி சொத்துக்களில் பங்கு உள்ள மற்ற பங்குதாரர்களை கட்சி சேர்க்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள நிலையிலும் நீதிமன்றத்தில் தோன்றி, அதை நிரூபிப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்படாத நிலையில் வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் வா.சா.1 ன் சாட்சியத்தின் மூலமும் வாதிகள் தங்களுக்கு தாவா சொத்தில் ½ பாகம் உள்ளது என தங்களது வழக்கை நிரூபித்துள்ளார்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் பிரதிவாதி தரப்பில் மற்ற சொத்துக்களை சேர்க்கவில்லை என குறிப்பிட்டு இருந்தாலும் வாதிகளுக்கு தாவா சொத்துக்கள் மட்டும் சரிபாதி பாத்தியம் உள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதியின் மற்ற சொத்துக்களையும் அதன் பங்குதாரர்களையும் இவ்வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை. எனவே, மேற்கண்ட சங்கதிகள் மற்றும் சாட்சிய சான்றாவணங்கள் அடிப்படையில் வாதிகள் வழக்குரையில் கோரியுள்ள பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என்று இப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

8. முடிவாக இந்த தாவா அனுமதிக்கப்பட்டு தாவாச் சொத்துக்களை இரண்டு சமபாகங்களாகப் பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும் என முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. வழக்கு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2017 ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்

வாதிகள் தரப்பில்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.06.2009 | பொது அதிகார பத்திரம். |
| வா.சா.ஆ.2 | 12.04.2011 | கிரையப்பத்திரம். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | 20.03.2012 | E.P.No.41/2011 நம்பரில் வாதி பெற்ற நிறைவேற்று மனு மற்றும் சான்றளிக்கப்பட்ட அதன் உத்தரவு நகல். |
| வா.சா.ஆ.4 | 19.03.2012 | தாவா சொத்தை பொறுத்து பெற்ற அமீனா மூலம் தனிசுவாதீனம் பெற்ற சான்றளிக்கப்பட்ட உத்தரவு நகல். |
| வா.சா.ஆ.5 | 16.04.2012 | பட்டா. |
| வா.சா.ஆ.6 | 16.04.2012 | பட்டா. |

<u>பிரதிவாதி தரப்பில்</u> ..இல்லை..

<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>

<u>வாதிகள் தரப்பில்</u>
வா.சா.1. N.துரைசாமி(1 ம் வாதி)

<u>பிரதிவாதி தரப்பில்</u>
..இல்லை..

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

வரைவு/தெளிவான தீர்ப்புரை
அ.வ.எண்.203/2012
நாள். 29.11.2017
மா.உ.நீ.தாராபுரம்.